பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**21 01 2026** **7 15**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று கர்நாடகா செல்கிறார்.

**2.** இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

**3.** சணல் உற்பத்தி செய்யும் ஆலைகளில் மூலப்பொருள் கையிருப்பை அதிகரிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

**4.** வரி விதிப்பு உள்ளிட்ட அமெரிக்கா மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடனான அவசரக் கூட்டத்திற்கு பிரான்ஸ் அழைப்பு விடுத்துள்ளது.

**5.** சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டி இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று கர்நாடகா செல்கிறார்.

தும்கூருவில் உள்ள ஸ்ரீ சித்தகான மடத்தில் நடைபெறும் ஸ்ரீசிவகுமாரா மகாசுவாமிஜியின் நினைவு தின நிகழ்ச்சியில் அவர் பங்கேற்கிறார்.

பின்னர் பெங்களூருவில் உள்ள சி.எம்.ஆர். தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியிலும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார்.

<<<<>>>>

இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள தாவோசில் நடைபெற்று வரும் சர்வதேச பொருளாதார மண்டல மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய அவர், பொருளாதார வளர்ச்சிக்கான சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

வரும் 2030ஆம் ஆண்டுக்குள் புதைபடிவமற்ற எரிசக்தி உற்பத்தி திறனை 500 ஜிகாவாட்டாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சூரியசக்தி, காற்றாலை மின் உற்பத்தி ஆகியவற்றுக்கான கட்டுமானப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

வெளிப்படையான சந்தை வாய்ப்புகள், உள்நாட்டு உற்பத்தி மேம்பாடு மற்றும் போட்டித்தன்மையை அதிகரிப்பதன் மூலம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான செலவுகள் வெகுவாக குறையும் என்று அவர் கூறினார்.

இதனிடையே இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளின் தலைவர்களை சந்தித்து அவர் பேச்சு நடத்தினார்.

பெல்ஜியம் நாட்டு துணைப் பிரதமருடன் நடத்திய பேச்சுவார்த்தையில் ஆராய்ச்சி மேம்பாடு, காற்றாலை மற்றும் சூரியசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது.

இதனிடையே குவைத் நாட்டின எரிசக்தி துறை அமைச்சர் திரு. **Subaih Abdulaziz** உடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

இந்திய எரிசக்தி துறையில் முதலீடு செய்வதற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாகவும், அதனைப் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி அழைப்பு விடுத்தார்.

<<<<>>>>

சணல் உற்பத்தி செய்யும் ஆலைகளில் அதற்கான மூலப்பொருள் கையிருப்பை அதிகரிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் சணலுக்கான மூலப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார்.

சணல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

சணல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் தடையற்ற செயல்பாடுகளை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. கிரிராஜ் சிங் கூறினார்.

<<<<>>>>

இந்தியா - கென்யா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு பாதுகாப்புத்துறை துணைத்தலைவர் லெப்டினெண்ட் ஜெனரல் ஜான் ஒமெண்டாவுடன், மத்திய பாதுபாப்பு தளவாட உற்பத்தி செயலாளர் திரு. சஞ்சய் குமார் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது பாதுகாப்பு சாதனங்களின் உற்பத்தி, திறன் மேம்பாடு, பயிற்சி, கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இது தொடர்பாக பாதுகாப்பு தளவாட உற்பத்தி துறை சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இவ்விரு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று புதுதில்லியில் நடைபெற்ற இந்திய - கென்ய பாதுகாப்பு கண்காட்சியில் இந்திய தொழில் நிறுவனங்களின் பாதுகாப்பு சாதனங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

<<<<>>>>

இந்தியா - இந்தோனேஷியா நாடுகளின் கூட்டுக் கடற்படைப் பயிற்சிக்காக இந்திய போர்க்கப்பல்களான **INS Tir, INS Shardul, INS Sujatha** மற்றும் இந்திய கடலோர காவல்படைக்குச் சொந்தமான **Sarathy** ரோந்துக் கப்பல் ஆகியவை அந்நாட்டு பெலவான் துறைமுகத்தை சென்றடைந்துள்ளன.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு நாடுகளின் கடற்படைக் கூட்டுப் பயிற்சி, கடல்சார் பாதுகாப்புக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு ஆசிய நாடுகளுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

<<<<>>>>

வரி விதிப்பு மற்றும் கிரீன்லாந்தைக் கைப்பற்றுவது போன்ற அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்குத் தீர்வு காண்பதற்காக

ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடனான அவசரக் கூட்டத்திற்கு பிரான்ஸ் அழைப்பு விடுத்துள்ளது.

இரண்டாவது முறையாக தாம் அமெரிக்க அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டு ஒரு ஆண்டு நிறைவடைவதையொட்டி, வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் திரு டொனால்டு டிரம்ப், இந்த வாரம் பாரிஸில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், தாம் பங்கேற்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஸ்விட்சர்லாந்தில் உள்ள டாவோஸில் நடைபெறும் உலக பொருளாதார மன்றக் கூட்டத்தில் இன்று தாம் உரையாற்றவுள்ளதாக அமெரிக்க அதிபர் கூறியுள்ளார்.

<<<<>>>>

அணைகளைப் பாதுகாப்பதில் உள்ள சாவல்களுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேசிய அணைகள் பாதுகாப்புக் குழு தலைவர் திரு. அனுபம் பிரதசாத் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற தேசிய அணைகள் பாதுகாப்பு குழும கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு அவர் பேசினார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அப்போது அவர சுட்டிக்காட்டினார்.

நீர்வளத்துறை, தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு குழுமம், மத்திய நீர்வள ஆணையம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<>>>>

அஞ்சலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளுக்கான பலன்களை அஞ்சல்துறை விரிவுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக மத்திய தகவல் தொடர்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கைவினைக் கலைஞர்கள், புத்தொழில் நிறுவனங்கள், சிறு நிறுவனங்கள், ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை எளிமைப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கான வரிவிலக்கு தள்ளுபடி மற்றும் ஜி.எஸ்.டி. வரி தள்ளுபடி உள்ளிட்ட பலன்கள் கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

இதற்கென நாடு முழுவதும் ஆயிரத்துக்கும் அதிகமான அஞ்சலக ஏற்றுமதி மையங்கள் செயல்பாட்டில் உள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தரமான நெடுஞ்சாலைகளை அமைப்பதில் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நான்கு உலக சாதனைகளை படைத்துள்ளதாக மத்திய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரத்யேக காங்கிரீட் கலவை கொண்டு பெங்களூரு - கடப்பா - விஜயவாடா இடையேயான 6 வழி பொருளாதார வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாலை கட்டுமானப் பணிகளில் நவீன தொழில்நுட்பத்துடன் சிறந்த பொறியியல் நிபுணர்களின் ஆலோசனைப்படி தரமான சாலைகள் அமைக்கப்பட்டு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சந்தோஷ் கோப்பை கால்பந்துப் போட்டி இன்று தொடங்குகிறது.

அசாமில் நடைபெறும் இந்தப் போட்டியில் 12 அணிகள் பங்கேற்கின்றன.

---------------

இந்திய சீனியர் மகளிர் கால்பந்து அணியின் பயிற்சியாளராக **Amelia Valverde** நியமிக்கப்பட்டுள்ளார்.

கோஸ்டாரிகாவை சேர்ந்த இவர் ஆஸ்திரேலியாவில் வரும் மார்ச் மாதம் நடைபெற உள்ள மகளிர் ஆசிய கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு பயிற்சி அளிக்கிறார்.

---------------

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---------------

இந்தியா - நியூஸிலாந்து இடையேயான முதலாவது டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

நாக்பூரில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் பேட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 154 ரன் எடுத்தது.

இதையடுத்து களமிறங்கிய தில்லி அணி 19 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 155 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**